பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 10 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 155வது பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

2. தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டதன் 10வது ஆண்டு தின நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

3. டென்னிஸ் விளையாட்டை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் மகப்பேறு இறப்பு விகிதத்தை அடுத்த 2 ஆண்டுகளில் 10ஆக குறைப்பதற்கான நடவடிக்கையாக சுகாதாரத்துறை செயலாளர் தலைமையில் பணிக்குழுவை மாநில அரசு அமைத்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை – ஹைதராபாத் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 155வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் சர்வமத பிரார்த்தனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காந்தி பிறந்த தினத்தையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், மகாத்மா காந்தியின் போதனைகளான அகிம்சை, அன்பு உள்ளிட்ட கொள்கைகளை கடைபிடித்து நாட்டை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல மக்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைதி மற்றும் கூட்டுறவுப் பாதையை மக்கள் பின்பற்ற வேண்டும் என மகாத்மா காந்தி வலியுறுத்தியதையும் திருமதி திரௌபத முர்மு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே புதுதில்லியில் தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டதன் 10வது ஆண்டு தினம் இன்று நடைபெற உள்ளது.

இதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்று 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான தூய்மை தொடர்பான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

<<<<>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 14 மாநிலங்களுக்கு 5 ஆயிரத்து 850 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து மகாராஷ்டிரா மாநிலத்திற்கு ஆயிரத்து 492 கோடி ரூபாயும், ஆந்திர மாநிலத்திற்கு ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வெள்ளத்தால் மோசமான பாதிப்பை எதிர்கொண்ட கேரள மாநிலத்திற்கு மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள 145 கோடியே 60 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவ மழையால் கனமழை, வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மாநிலங்களான அசாம், மிசோரம், நாகாலாந்து, குஜராத், ஆந்திரா, மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களில் மத்திய குழுவினர் மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

பீஹார் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் விரைவில் சென்று அறிக்கை அளித்த பின்னர் அந்த மாநிலங்களுக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த ஆண்டில் 21 மாநிலங்களுக்கு இதுவரை 14 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் பேரிடர் நிவாரண நிதி விடுவிக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு 3வது மற்றும் இறுதிக்கட்டமாக நேற்று நடைபெற்ற தேர்தலில் 65 புள்ளி ஆறு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

ஏற்கனவே கடந்த மாதம் 18 மற்றும் 25ஆம் தேதிகளில் இரண்டு கட்ட தேர்தல்கள் முடிவந்த நிலையில், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாக 24 தொகுதிகளில் நேற்று வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்தது.

எந்தவொரு அசம்பாவித சம்பவங்களும் இல்லாமல் தேர்தல் நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை வரும் 8ஆம் தேதி நடைபெறும்.

இதற்கிடையே வாக்காளர்களுக்கு ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகப்பேறின்போது ஏற்படும் இறப்பு விகிதத்தை குறைக்க மாநில அளவிலான சிறப்பு பணிக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

மகப்பேறு இறப்பு விகிதம் தற்போது ஒரு லட்சம் பேருக்கு 45ஆக இருப்பதை அடுத்த 2 ஆண்டுகளில் 10க்கும் குறைவாக குறைக்க முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்திருப்பதாக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாநில மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு துறைகளின் செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களை உள்ளடக்கிய பணிக் குழுவை அரசு அமைத்திருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசவத்திற்கு முந்தைய திட்டமிடல், திறன் மேம்பாடு, அத்தியாவசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதன் மூலம், மகப்பேறு இறப்புகளை குறைப்பதில் கவனம் செலுத்த இந்தக் குழு உதவும் என்று அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

டென்னிஸ் விளையாட்டை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் அரங்கில் பிரபல டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் பெயரிலான பார்வையாளர் மாடத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

விஜய் அமிர்தராஜின் சாதனையை விளையாட்டில் சாதிக்க துடிக்கின்ற இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் அவருடைய பெயரை இந்த மாடத்திற்கு சூட்டியிருப்பதாக அவர் கூறினார்.

சாதனையாளர்களை அங்கீகரிக்கின்ற அரசாக மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் 55 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கி அவர் பேசினார்.

இதுபோன்ற திட்டங்களால் பெண்களின் வாழ்வாதாரம் பெரிதும் மேம்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையின்போது உயிர்ச்சேதம் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

வேலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தி இருப்பதை சுட்டிக்காட்டினார்.

வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்க ஏதுவாக மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திரு. முத்தரசன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்றும், நாளையும் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், வட தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

குமரி மற்றும் கச்சத்தீவு உள்ளிட்ட கடல் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே வடகிழக்குப் பருவமழை இந்த மாதம் மூன்றாவது வாரத்தில் தொடங்கும் என்றும், இந்த ஆண்டு இயல்பைவிட கூடுதலாக மழை பெய்யக்கூடும் என்றும் தென்மண்டல வானிலை மைய தலைவர் திரு. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹெஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்பின் தலைவர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

<<<<>>>>

பிரான்ஸ் சென்றுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் பாரீசில் அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவல் மேக்ரோனை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு தொடக்கக் கல்வி ஆசிரியர் தகுதித் தேர்வில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக அம்மாநில முன்னாள் கல்வி அமைச்சர் உட்பட 2 பேரை சிபிஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு சார்பில் தேசிய தன்னார்வ ரத்ததான தினம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபு சங்கர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. மாதேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ராமேஸ்வரம் பாம்பன் கடலில் ரயில் பாலத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள இரும்பு தூக்கு பாலத்தை மேலே தூக்கி ரயில்வே துறையினர் வெற்றிகரமாக சோதனை மேற்கொண்டனர்.

<<<<>>>>

கோவை, உக்கடம் அருகே பெரியகுளம் பகுதியில் உலக முதியோர் தினத்தையொட்டி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதியோர் விழா நடைபெற்றது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காதவாறு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை — ஹைதராபாத் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியின் ஆட்டநேர இறுதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை — பெங்களூரு அணிகள் மோதுகின்றன. இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஷாங்காய் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - சீனாவின் **Yibing Wu**-ஐ எதிர்கொள்கிறார்.

இந்திய நேரப்படி இப்போட்டி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஸ்பெயின் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை — பிரான்ஸ் நாட்டின் **Robin Bertrand – Benoit Paire** இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் நான்கு விக்கெட் இழப்புக்கு 110 ரன் எடுத்தது. இதன் மூலம் அந்த அணி 107 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 296 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்கிஸில் 293 ரன் எடுத்தது.

**<<<<The End>>>>**